ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 1715/25 - 2011 ජූලි 21 වැනි බ්‍රහස්පතින්දා - 2011.07.21
*1715/25 ஆம் இலக்கம் - 2011 ஆம் ஆண்டு யூலை மாதம் 21 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*சீ. எவ். 1/64.*

### (40 ஆம் அத்தியாயமான) பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டம்

*(40 ஆம் அத்தியாயமான) பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் கீழ் சனாதிபதியினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி.*

*மஹிந்த ராஜபக்ஷ,*
*சனாதிபதி.*

கொழும்பு,
*2011, யூலை 21.*

ஒழுங்குவிதி

*1.* இவ்வொழுங்குவிதி 2011 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, அவசரகால (உள்ளூரதிகார சபைகளை நிர்வகித்தல்) ஒழுங்குவிதி என எடுத்துக்காட்டப்படலாம்.

*2.* இரண்டாயிரத்துப் பதினோராம் ஆண்டு பெப்புருவரி மாதம் 28 ஆந் திகதிய 1695/4 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2011 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க அவசரகால (உள்ளூரதிகார சபைகளை நிருவகித்தல்) ஒழுங்குவிதியில் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், இவ்வொழுங்குவிதிக்கான அட்டவணையின் II ஆம் நிரலில் குறித்துரைக்கப்பட்ட திகதிகளிலிருந்து, 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, பிரதேச சபைகள் சட்டத்தின் கீழ் இந்த ஒழுங்குவிதிக்கான அட்டவணையின் I ஆம் நிரலிற் குறித்துரைக்கப்பட்ட பிரதேச சபைகளுக்கான உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான தேர்தலொன்று எத்தேதியன்று நடாத்தப்படுகின்றதோ அத்திகதிவரை, மேற்கூறப்பட்ட சபைகளின் அலுவல்களினது நிர்வாகம், அத்தகைய அட்டவணையின் IV ஆம் நிரலில் எந்த அலுவலர்களின் பெயர்கள் குறித்துரைக்கப்படுகின்றனவோ அந்த அலுவலர்களின் இடத்தில், இந்த ஒழுங்குவிதிக்கான அட்டவணையின் III ஆம் நிரலில் எந்த ஆட்களின் பெயர்கள் குறித்துரைக்கப்படுகின்றனவோ அந்த ஆட்களுக்கு உரித்தாக்கப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அவர்களினால் பிரயோகிக்கப்படுதலும் புரியப்படுதலும் நிறைவேற்றப்படுதலும் வேண்டும்.

**அட்டவணை**

| நிரல் I | நிரல் II | நிரல் III | நிரல் IV |
|---|---|---|---|
| 1. புதுக்குடியிருப்பு பிரதேச சபை | 2011.04.11 | திரு. என். ஜெயகாந்தன், பிரதேச செயலாளர், புதுக்குடியிருப்பு. | திரு. என். கோனேஸ்வரன் பிரதேச செயலாளர் புதுக்குடியிருப்பு. |
| 2. யட்டிநுவர பிரதேச சபை | 2011.04.28 | திருமதி வத்சலா மாரம்பகே, பதில் உதவி ஆணையாளர், உள்ளூராட்சி மன்றம், கண்டி. | திரு. டபிள்யூ. எம். விக்ரமரத்ன பிரதேச செயலாளர் யட்டிநுவர. |
| 3. உக்குவளை பிரதேச சபை | 2011.04.28 | திரு. டீ. ஆர். பீ. நிஷாந்த பண்டார கருணாதிலக்க, உதவி ஆணையாளர், உள்ளூராட்சி மன்றம், மாத்தளை. | திருமதி எல். ஏ. சுஜாதா வீரசிங்க பிரதேச செயலாளர் உக்குவளை. |
| 4. அக்மீமன பிரதேச சபை | 2011.06.07 | திரு. சீ. சீ. முஹாந்திரம், உதவி ஆணையாளர், உள்ளூராட்சி மன்றம், காலி. | திருமதி பரணகமகே, பிரியந்தா தமயந்தி, பிரதேச செயலாளர், அக்மீமன. |
| 5. ஹிங்குரக்கொட பிரதேச சபை | 2011.06.07 | திரு. திக்ஹேனேகெதர, சிறிமெவன் தர்மசேன, பிரதேச செயலாளர், ஹிங்குரக்கொட. | திரு. ரி. ஏ. டீ. டபிள்யூ. தயானந்த, பிரதேச செயலாளர், ஹிங்குரக்கொட. |

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.